DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 104/2017 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **நடராஜன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.02.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சூரக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மார்க் கடை எண். 7607 முப்பையூரில் விற்பனையாளராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 சையது முகம்மது, சாட்சி ஜாகீர் உசேன் ஆகியோர்களை தெரியாது. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 சையது முகம்மது. சாட்சி ஜாகீர் உசேன் ஆகியோர்கள் எவ்வாறு காயம்பட்டார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 24.05.2008ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் இளையான்குடியில்உள்ள டாஸ்மார்க் கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது எதிரிகள் முன் விரோதம் காரணமாக அ.சா.1 மற்றும் சாட்சி ஜாகீர் உசேன் ஆகியோர்களை பாட்டிலாலும், கை மற்றும் செங்கலாலும் தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும் சாட்சி ஜாகீர் உசேன் வைத்திருந்த ரூ.5000/- மதிப்புள்ள செல்போனை பறித்து சென்றுவிட்டதாக போலிசார் விசாரணையில் நான் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக வேண்டுமென்றே வழக்கு சம்பவத்தை மறைத்து அவர்களுக் சாதகமாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.10 14:20:39 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**